1981 பிப்ரவரி 28]

கும்பகோணம் அறிஞர் அண்ணா அரசினர் மேல் நிலைப் பள்ளி.

* 100. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அறிஞர் அண்ணா அரசினர் மேல் நிலைப் பள்ளியின் கூரையை வேய, அப்பள்ளியின் வசதிக் கட்டண நிதியிலிருந்து பணம் கட்டப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும், பொதுப் பணித் துறை அக்கூரையை வேய்ந்து தரவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அப்பள்ளிக் கூரையை வேய்ந்துதர அரசு மேற் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ)—மேற்படி பள்ளி நிர்வாகத்தினர் 1980-ம் வருடம் மார்ச் மாதத்தில் ரூ. 7,000 (ரூபாய் ஏழு ஆயிரம் மட்டும்) முன்பணமாக பள்ளிக் கட்டிட கூரை வேயும் வேலைக்காக, நிர்வாகப் பொறியாளர், காவேரி கோட்டம், தஞ்சாவூர் அவர்களிடம் கட்டினார்கள். மேற்படி பணம் கட்டியபின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு பள்ளிக் கூரையை வேய்ந்து தரும் பணி இவ்வாண்டு செப்டம்பர் திங்களிலேயே முடிக்கப்பட்டு மேற்படி பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: பள்ளியில் இருக்கும் வசதிக் கட்டண நிதியி லிருந்து பணம் கட்டி, அது பொதுப் பணித் துறையால் ஏற்கப்பட்டு, அதற்குப் பிறகு பணி முடிக்கப்பட்டு அக்கட்டிடம் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்கப் படுவதற்குள் பல மாதங்களாகிவிடுகின்றன. இந்த இடைப்பட்ட காலத்தில் மாணவர்கள் வெய்யிலிலும் மழையிலும் அவதிப்படக்கூடிய சூழ்நிலை இருக் கிறது. எனவே இப்படிப்பட்ட சிறிய தொகையில் செய்யப்படும் பணிகளை தலைமையாசிரியரின் பொறுப்பிலேயே நிறைவேற்ற அதிகாரம் அளிக்கப்பட் டால், இத்தகைய பணிகள் உடனடியாக முடிக்கப்படும். அதற்கான முயற்சி களை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கட்டிடம் கட்டுவது போன்ற காரியங்களில் பொறியாளர்களின் அனுமதியும் அவர்களின் மேற்பார்வையும் தேவைப்படுகிறது என்பதுதான் அரசின் கருத்தாகும். அதை மாற்றி தலைமை யாசிரியரிடம் ஒப்படைப்பது சரியாக இருக்காது. காரணம் அத்தகைய காரி யத்திற்கான அனுபவம் அவர்களுக்கு இல்லை என்பது மட்டுமல்ல, அவர் களுக்கு வேறு வேலையும் தருவதாக அது இருக்கும். அதோடு ஒரு சிலர் தவறு செய்தாலும், அது அனைத்துத் தலைமையாசிரியர்களையுமே பாதிக்கும் நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இது கட்டிடம் கட்டுகிறவேலையல்ல. கட்டிடத்திற்குக் கூரை வேய்வதுதான்; ஏற்கெனவே உள்ள கூரையைச் சரிபார்ப்பது அல்லது பழுது பார்ப்பது. அதற்குப் பொதுப் பணித் துறையின் எஞ்சினியரிடம் போக வேண்டுமென்றால், 6 மாதம், 9 மாதம் என்று கால தாமதமாகிறது. அதன் காரணமாக மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே இத்தகைய நிலைமைகளை மாற்றும் வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலையை சிக்கிரமாக முடிக்க வேண்டுமென்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்தக் கருத்தை அந்த இலாக்காவிற்கு அனுப்பலாம். ஆனால் கூரை வேய்வதற்காக ஓர் உத்தரவு, கட்டிடம் கட்டுவதற்காக ஓர் உத்திரவு என்று பல விதிகளைப் போட்டு உத்தரவிட்டால், அது முறையாக இருக்காது என்று கருதுகிறோம். ஆகவேதான் வேண்டாம் என்று சொல்லுகிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : பொதுவாக கல்வித் துறையில் இவ்வாறு கட்டிடங்கள் கட்டுவதற்காக சரியான முறையில் அனுமதியைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதால், கல்வித் துறையிலேயே பொறியாளர் பிரிவை ஏற்படுத்தி, அதன் மூலமாக தமிழகத்திலுள்ள பள்ளிகளுக்கான கட்டிடங்களைக் கட்டும் வாய்ப்பை உருவாக்கலாம். அதுபற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட ஒரு கருத்தை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. முத்துசாமி : பள்ளி வசதிக் கட்டிட நிதியிலிருந்து என்னென்ன பள்ளித் தேவைகளுக்கு நிதி எடுத்துச் செலவிடலாம் என்று பட்டியல் போட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பட்டியலில் உள்ள செலவினங்களுக்குச் செலவு செய்வதற்கு மாவட்டக் கல்வி அலுவலரின் அனுமதியைப் பெற வேண்டிய நிலை இருக்கிறது. மேல் நிலைப் பள்ளிகளில் மாவட்டக் கல்வி அலுவலர் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்து உள்ளவர்கள்தான் தலைமையாசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு எழுதி அனுமதியைப் பெற்றுத்தான் செலவு செய்ய வேண்டும் என்ற நிலை இருப்பதால் காலதாமதமாகிறது. தலைமையாசிரியர்கள் அப்படிப்பட்ட செலவுகளைச் செய்ய அதிகாரத்தை நாம் தந்திருந்தாலும், அதற்கு மாறாக கல்வித் துறை இயக்குநருடைய புரசீடிங்ஸ் இருப்பதால், அதை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

1981 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைமையாசிரியர்களுக்கே இந்த அதிகாரத்தைத் தந்தால், அது தவிர்க்க முடியாத தவறுகள் கல்வித் துறையில் நடைபெறுகின்றன என்ற தப்பான எண்ணத்தை உருவாக்கும். அதைத் தடுப்பதற்காகத்தான், இன்னுமொரு இடத்திலேயிருந்து அவர்கள் அனுமதியைப் பெற்று அல்லது தெரிவித்துவிட்டுச் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம். தவறு நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான் இது இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமல்ல. அதனால் எல்லோரும் தவறு செய்வார்கள் என்பதுமல்ல. சில பேர் கூட தவறு செய்கின்ற வாய்ப்பு பெறக்கூடாது என்பதற்காகத்தான் அப்படி வைத்திருக்கிறோம். ஆனால் கால தாமதத்தைத் தவிர்க்க வேறு ஏதாவது செய்யலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண் 101 ஒத்தி வைக்கப்படுகிறது.

சாதிச் சான்றிதழ்.

* 102 வினா.—திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் 29—10—1979 அன்று வினா எண் 34-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாணவர்களுக்கு நிரந்தரமாக சாதிச் சான்றிதழ் வழங்கும் பொருள் பற்றி அரசு முடிவு எடுத்து விட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(இ) சாதிச் சான்றிதழ் படிவங்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்ப படிவங்கள் அச்சில் உள்ளன.

திரு. செ. முத்துசாமி : இப்படி விரைவாக அரசு நடவடிக்கை எடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போலவே நிரந்தரமான சான்றிதழ்கள் தரும்போது, தாசில்தாரிடம் கையெழுத்துப் பெறும் சூழ்நிலை இல்லாமல், சிகப்புநாடா முறையை மாற்றி பிற்பட்டோர் போன்ற எல்லோருக்கும் அந்தச் சலுகை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS